மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

24.10.2022 திங்கட்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# 2048 ல் இலங்கையை அபிவிருத்தியடைந்த அடைந்த நாடாக்குவேன் - ஜனாதிபதி ரணில்



2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே தமது நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். போராட்டம் என்ற போர்வையில் வன்முறைச் செயல்களைச் செய்து அரசியல் அதிகாரத்தைப் பெற முயன்றவர்களை ஒன்றிணையுமாறும் அவர் அழைப்பு விடுத்தார். 2048 இளைஞர் மேடையில் அபிவிருத்தியடைந்த நாட்டுக்கான பயணம் என்ற நிகழ்ச்சித்திட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க ஜனாதிபதி அனுமதி



முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை முதல் கட்டமாக இரட்டிப்பாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார். எதிர்வரும் நவம்பர் 1ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் உள்ள முச்சக்கர வண்டிகளையும் செய்வதற்கும் 6ஆம் திகதி முதல் ஏகைய மாகாணங்களில் உள்ள முச்சக்கர வண்டிகளையும் புதிய எரிபொருள் கோட்டாவுக்கு பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## நாளை சூரிய கிரகணம்



நாளைய தினம்(25) நிகழவுள்ள சூரிய கிரகணத்தை யாழ்ப்பாணத்தில் மிகத்தெளிவாக காண முடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் பணிப்பாளர், பேராசிரியர் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டார். நாளை(25) மாலை 5.27 மணியளவில் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியும். இதனை சுமார் 22 செக்கன்கள் வெற்றுக் கண்களால் பார்வையிட முடியும் எனவும் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

## வரம்பை மீறி 24 வாகனங்களைப் பயன்படுத்திய அமைச்சர்கள்

### விசாரணை எதுவும் இடம்பெறவில்லை : சுட்டிக்காட்டியது தேசிய கணக்காய்வு அலுவலகம்




2015–2019 காலகட்டத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரும், ஒரு இராஜாங்க அமைச்சரும் வரம்பை மீறி 24 வாகனங்களைப் பயன்படுத்தியதாக தேசியக் கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது. இதன்படி, சுகாதார அமைச்சர் பதினாறு வாகனங்களையும், இராஜாங்க அமைச்சர் மேலும் எட்டு வாகனங்களையும் பயன்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அமைச்சருக்கு வருடாந்த எரிபொருள் கொடுப்பனவாக 02

## சூறாவளியாக வலுவடைந்துள்ள தாழமுக்கம்



வங்காள விரிகுடாவை அண்மித்த பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் தற்போது சூறாவளியாக வலுவடைந்துள்ளது. இதற்கு 'சிட்ரங்' என பெயரிடப்பட்டுள்ளது. நாளை(25) காலை வேளையில் இந்த சூறாவளியானது பங்களாதேஷ் கடற்பிராந்தியம் நோக்கி நகரக்கூடும் எனவும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. எவ்வாறாயினும் இந்த சூறாவளியினால் இலங்கைக்கு பாதிப்புகள் ஏதும் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சில பகுதிகளில் பலத்த மழை பெய்யலாம் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மேல் மற்றும் 02

## எரிவாயு விலை அடுத்த மாதம் மேலும் குறையலாம்




உலக சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, உள்நாட்டு எரிவாயு விலை அடுத்த மாதம் மேலும் குறையலாம் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக வங்கியிடமிருந்து லிட்ரோ நிறுவனம் பெற்ற கடனை டிசம்பர் மாதம் செலுத்த முடியும் என அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். மேலும் மீதமுள்ள கடனை டிசம்பர் மாதத்திற்குள் செலுத்த எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரட்டைக் குடியுரிமை கொண்ட உறுப்பினர் பதவி விலக வேண்டும்

நீதிமன்றத் தீர்ப்பைத் தவிர வேறு ஒரு பொறிமுறையின் மூலம் இரட்டைக் குடியுரிமை தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 22வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர்கள் ஆகியுள்ளார். 02

## மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக பிள்ளையான் நியமனம்



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். .21.10.2022 முதல் அமுலுக்குவரும் வகையில் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுவிற்சிலாந்தில்
அகணி சுரேஸ்(கனடா) இன்
நூல்கள், பாடல்கள் அறிமுகவிழா





அழைப்பிதழ்
நாள் : அக்டோபர் 30, 2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 5 மணி - 7:30 மணி
இடம் : Birmensdorferstrasse 67
8004 Zürich
தலைமை திரு ச. மகேந்திரன்
முதன்மை விருந்தினர்–கலாநிதி கல்லாறு சதீஸ்
சிறப்பு விருந்தினர்கள்
திரு சி.சேத்திரபாலன் (பிரான்ஸ் )
திரு பரமானந்தம் (பிரான்ஸ் )
நிகழ்ச்சித் தொகுப்பாளர்–திரு முருகேசன் குமணன்

- பேச்சாளர்கள்

செல்வி வித்தியா மகேந்திரன்
திருமதி மதிவதனி பத்மநாதன்
திருமதி கௌரி பூர்ணராஜன்பாபு
திரு குடத்தனை உதயன்
திரு துரைராசா சுரேந்திரன் (சுரேன்)
திருமதி கமலினி கதிர்
திரு வடிவேலு அருள்நந்தன்

- வாழ்த்தும் கவிஞர்கள்

பாவலர் சரளா விமலராசா
கவிஞர் ரதி கமலநாதன்
ஒழுங்கமைப்பு – மகேந்திரன்
(கணித கற்கைநெறி மையம்)
0041764318379
உங்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
ALL ARE WELCOME

## உழவு இயந்திரம் குடை சாய்ந்ததில் சாரதி பலி



மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை காவல் பிரிவிற்குட்பட்ட சோலையக வீதியில் உழவு இயந்திரம் குடை சாய்ந்ததில் சாரதி பலியான சம்பவம் நேற்று (23) மாலை இடம்பெற்றுள்ளது. பலியானவர் படையாண்டவெளி கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் வினோராஜ் என இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போதே உழவு இயந்திரம் வீதியை விட்டு விலகி வாய்க்காலுக்குள் குடை சாய்ந்ததால் உழவு இயந்திரத்தினுள் அகப்பட்டு சாரதி சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

# மக்கள் கேட்பது ஆட்சி முறைமையில் மாற்றமே அன்றி கப்பம் சார்ந்த பதவிகளல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்த ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமெனவே மக்கள் கோரிக்கை விடுப்பதாகவும், அதற்கு மாறாக தன்னல விருப்பின்படி தனிப்பட்டவர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதல்ல எனவும்,புதிய முறையின் கீழ்,பொருளாதார,சமூக நீதி மற்றும் மனிதநேயத்தை முதன்மைப்படுத்தும் வேலைத்திட்டமே தேவை எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நேற்றுமுந்தினம் (22) இடம்பெற்ற மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார். பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நடந்த மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக் கூட்டத்தினை தொகுதி அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபர் ரஹ்மான் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நாட்டின் அரசியல்வாதிகளின் மகன்மார்கள் மற்றும் மகள்மார்கள் தத்தமது அரசியல் பிரவேசங்களுக்காக எப்போதும் தங்கள் பெற்றோரின் தேர்தல் தொகுதிகளையே பொறுப்பேற்றனர் எனவும், இந்த வகையில் கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி தனித்துவம் வாய்ந்ததாக இருந்தபோதிலும்,தனது அரசியல் பயணத்தில் கஷ்ட பிரதேசத்திற்குச் சென்று அந்த பிரதேச மக்களைப் பற்றி அறிந்து கொண்டு தன்னல முயற்சியாகவே அரசியல் பயணத்தை ஆரம்பித்தாகவும்,இதற்குக் காரணம் நாட்டுக்கும் மக்களுக்கும் தம்மைப் பற்றி நிரூபிக்க வேண்டியதொரு தேவையிருந்தமையால் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இன,மத,சாதி,வர்க்கப் பிரிவினைகளை ராஜபக்சவினர் உருவாக்கி நாட்டை துண்டு துண்டாக பிளவுபடுத்தி இன,மதங்களுக்கு இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவுதான் தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் அவலமான தலைவிதிக்குக் காரணம் எனவும்,தங்கள் குடும்பத்தை முடிசூடவே அவர்கள் விரும்பினர் எனவும்,அதில் ஏதேச்சதிகாரமும், பிடிவாதமும் பொதிந்திருப்பதாகவும்,அதன் காரணமாக 220 இலடசம் மக்களும் மிகவும் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். மலட்டுக் கொத்து,கருத்தடை நடவடிக்கைகளில் ஆரம்பித்து தகனம்,அடக்கம் வரை இந்த இன,மத பாகுபாடு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இன்று பல்வேறு தரப்பினரும் இனவாதம்,மதவாதம் என்று கூக்குரலிடுகின்ற போதிலும் அன்று ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனையவர்கள் அதனை எதிர்க்கவில்லை எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

22 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் எழு மூளைக்காரரின் பல் ஒன்று பறிபோனதாகவும்,அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும்,முடிந்தால் கொழும்பில் போட்டியிட்டுக்காட்டுமாறும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,படிப்படியாக ராஜபக்ச ஆதிக்கத்தை மக்கள் பலத்தால் இல்லாமலாக்குவதாகவும் தெரிவித்தார்.



இதேவேளை,ரணசிங்க பிரேமதாஸவிற்கு பின் மத்திய கொழும்பை திறம்பட வழிநடத்தும் மத்திய கொழும்பின் குட்டி பிரேமதாஸ முஜிபுர் ராஹ்மான் என புதிய பட்டம் சூட்டிய எதிர்க்கட்சித் தலைவர்,எதிர்காலத்தில் அமையப்பெறும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனவும் வாக்குறுதியளித்தார்.

### வரம்பை மீறி 24 வாகனங்களைப் பயன்படுத்திய அமைச்சர்கள்

20 இலட்சம் ரூபாயும், இராஜாங்க அமைச்சர் 40 இலட்சம் ரூபாயையும் பெற்றுக்கொண்டுள்ளனர். அமைச்சர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை விட மேலதிகமாக பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இதுவரை எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்றும் தேசியக் கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.

### சூறாவளியாக வலுவடைந்துள்ள தாழமுக்கம்

சபரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று(24) 100 மில்லி மீட்டருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகலாம் எனவும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் சீரற்ற வானிலை காரணமாக காலி, களுத்துறை, நுவரெலியா, கேகாலை இரத்தினபுரி ஆகிய 05 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

### இரட்டைக் குடியுரிமை கொண்ட உறுப்பினர் பதவி விலக வேண்டும்

எவ்வாறாயினும், இரட்டைக் குடியுரிமை கொண்ட உறுப்பினர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. தேர்தலின் போது வேட்புமனுக்களை ஏற்கும் போது இரட்டைக் குடியுரிமை குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மேலும் இது தொடர்பாக அறிக்கை அளித்தால் மட்டுமே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.






அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22312 | வே | 1985**
யாழ்நகர் | இந்து | MSc
Software Engineer
சதயம் (கும்பம்) | USA
174 செ.மீ | செவ்: 12

**22888 | வே | 1995**
பருத்தித்துறை | இந்து
BSc | IT Engineer
திருவாதிரை (மிதுனம்)
183 செ.மீ | செவ்: 01

**25018 | வே | 1988**
வல்வெட்டித்துறை | இந்து | BD
Cutomer Service Officer
சதயம் (கும்பம்) | UK
170 செ.மீ | செவ்: 08

**22498 | வே | 1992**
காரைநகர் | இந்து | BCom,
AAT | Asst. Accountant
திருவோணம் (மகரம்)
175 செ.மீ | செவ்: 08

**22510 | வே | 1990**
நெல்லியடி | இந்து | BBA,
CIMA | Audit Manager
விசாகம் (விருச்சிகம்)
167 செ.மீ | UAE

**22462 | வே | 1992**
வளலை | இந்து | BD,
HND | Civil Engineer
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**22921 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Civil Engineer
திருவோணம் (மகரம்)
172 செ.மீ

**25015 | வே | 1987**
நயினாதீவு | இந்து | BD
Supervisor | கனடா
சுவாதி (துலாம்)
167 செ.மீ

**22939 | ந | 1995**
அச்சுவேலி | இந்து | A/L
Restaurant Staff
பூராடம் (தனுசு) | France
168 செ.மீ

**22131 | வே | 1990**
கரனைவாய் | இந்து | BSc
MSc | Civil Engineer
மகம் (சிம்மம்) | Singapore
168 செ.மீ

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25000 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
180 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**22318 | வே | 1991**
நல்லூர் | இந்து | A/L
Management Assistant
சித்திரை (துலாம்) | Divorced
160 செ.மீ | செவ்: 12

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**22095 | வே | 1986**
இணுவில் | இந்து | A/L
Chef | France
சுவாதி (துலாம்)
183 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**22993 | வே | 1995**
கொக்குவில் | இந்து
BSc | Engineer
கார்த்திகை (ரிஷபம்)
177 செ.மீ

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23071 | வே | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ | சூ.செவ்: 05

**24943 | வே | 1993**
தெல்லிப்பழை | இந்து
Diploma | Teacher
சதயம் (கும்பம்)
160 செ.மீ | சூ.செவ்: 11

**22609 | கோ | 1996**
பருத்தித்துறை | இந்து
Diploma | Teacher
புனர்பூசம் (மிதுனம்)
167 செ.மீ | செவ்: 12

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22495 | வே | 1996**
மானிப்பாய் | இந்து | A/L
Accountant
உத்தரம் (கன்னி)
165 செ.மீ | செவ்: 08

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து | BSc
Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
160 செ.மீ | செவ்: 02

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BBS Congras | சுவிஸ்
விசாகம் (துலாம்)
167 செ.மீ | சூ.செவ்: 03

**22789 | வே | 1994**
கொக்குவில் | இந்து | BSc
Operation Analyst
பூசம் (கடகம்)
159 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**23086 | வே | 1996**
சண்டிலிப்பாய் | இந்து | BBA,
ACCA | Lecturer
விசாகம் (துலாம்)
170 செ.மீ

**22537 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**22474 | வே | 1997**
வவுனியா | இந்து
BSc | QA Engineer
பரணி (மேடம்)
167 செ.மீ | செவ்: 02

**25012 | வே | 1990**
நல்லூர் | இந்து | BSc
Finance Officer
திருவாதிரை (மிதுனம்)
158 செ.மீ | செவ்: 07

**22696 | வே | 1996**
சித்தங்கேணி | இந்து | BSc
Software Engineer
திருவோணம் (மகரம்)
176 செ.மீ | சூ.செவ்: 05

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
PG Diploma (Final Year)
Staff Assistant | சித்திரை
(கன்னி) | 157 செ.மீ

**22158 | வே | 1993**
அல்வை | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ


**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Bank
Assistant | மூலம் (தனுசு)
159 செ.மீ

**22936 | வே | 1993**
அளவெட்டி | இந்து
BBM | Teacher
மகம் (சிம்மம்)
151 செ.மீ | செவ்: 07

**22870 | வே | 1993**
ஏழாலை | இந்து | BSc,
PhD | Researcher
மூலம் (தனுசு) | Australia
157 செ.மீ | சூ.செவ்: 10

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து
BFA | Job Seeker
மூலம் (தனுசு)
159 செ.மீ | சூ.செவ்: 12

# கபிலவனத்தில் சனிப் பிரதோஷ விரதம்

**( காரைதீவு சகா)**

பிரதோஷ விரதங்களில் முதன்மையான சனிப் பிரதோஷ விரதம் சனிக்கிழமை (22) பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது. சித்தர்களின் குரல் அமைப்பினர் இந்த சனிப்பிரதோஷ விரதத்தினை மௌனராகலையை அடுத்துள்ள அடர்ந்த கபிலவனத்தில் சிறப்பாக அனுஷ்டித்தனர். சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் இந்த அடர்ந்த கபில வனத்தில் யாகம் செய்து, வில்வ பிரதிஷ்டை செய்து, மரகதலிங்கத்திற்கு மந்திர உச்சாடனம் செய்து வழிபட்டார்கள்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் ,நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் ஆலோசனையின்படி இப்பிரதோச விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. பிரபல நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பாலகுமாரன் குழுவினரின் அருமையான பாடலும் இடம்பெற்றது. காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான தவிசாளரும் தர்மகத்தாவுமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கல்வியியலாளர் வி.ரி. சகாதேவராஜா , திருகோணமலை பிரகாஷ் ஆசிரியர் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். வனமெங்கும் குங்கிலியம் மற்றும் அகில் வாசம் வீசியது. எந்த மிருகமும் அருகில் வரவில்லை. ஆக பிள்ளையார் – யானை மட்டும் வந்து ஆசீர்வாதம் செய்து பிரசாதத்தை பெற்றுக் கொண்டது.

பங்கேற்ற பக்தர்களுக்கு இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது. அங்கு நளபாகசக்கரவர்த்தி மதி அண்ணரின் கருப்பட்டிக்கூழ் மற்றும் பழங்கள் படைத்து சிவசங்கர் ஜி வில்வ இலை சமர்ப்பணம் செய்து சிவபுராணம் பாடினார். அனைவரும் இணைந்து பாடினர். மாலை 6 மணியளவில் விரதபூஜை முடிவடைந்ததும் அடர்ந்த கானகத்திலே மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது.

# தங்கம்மா அம்மையார் நினைவாக நிலைபேறான பழ மரநடுகை




**ஹஸ்பர்**

நூற்றாண்டில் கால்பதிக்கும் திருகோணமலை ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஸ்தாபகரும் தம்பலகாமம் பட்டிமேட்டுக் கிராமத்தில் பிறந்த தங்கம்மா அம்மையார் அவர்களது நினைவாக நிலைபேறான பழ மரநடுகை தி/சாரதா வித்யாலயம் மற்றும் தி/ ஆதிகோணேஸ்வரா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆதிகோணநாதர் ஆலயத்தில் அன்னையாருக்கான ஆராதனை இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, திருகோணமலை ஶ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் மற்றும் பிரதி அதிபர் உட்பட பலர் கலந்துகொண்ட இன்நிகழ்வினை இருபாடசாலைகளின் அதிபர்களும், கோயிலடி கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஶ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின்பழைய மாணவிகளும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலவச கண் பரிசோதனை முகாம்



**(அ . அச்சுதன்)**

DEAF link நிறுவனம் மற்றும் சர்வமத அமைப்பினர் இணைந்து கல்முனைவலமத்தில்உள்ள விசேட கல்வி அலகு மாணவர்களுக்கும் , ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குமான இலவச கண்பரிசோதனை முகாம் கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலையில்(21.10.2022) இடம் பெற்றது.இந்நிகழ்வு பாடசாலை அதிபர் ள. கலையரசன் அவர்களின் தலைமையில் சர்வமத அமைப்பினர் மற்றும் வலயக்கல்வி அலுவலகம், கல்முனை ஆதார வைத்தியசாலை ஊழியர்கள், கல்முனை வடக்கு பிரதேச செயலக ஊழியர்கள் உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமான காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதில்லையென தீர்மானம்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமான கிறகரி ஏரியை சுற்றியுள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி நுவரெலியா மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எதிர்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். நுவரெலியா மாநகரசபையின் ஒக்டோபர் மாதத்திற்கான மாதாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த (21) வெள்ளிக்கிழமை நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நுவரெலியா மாநகரசபை கட்டுபாட்டிலுள்ள பெறுமதியான காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. எக்காரணம் கொண்டும் நுவரெலியா மாநகரசபை கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்க முடியாதென மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரத்ன முன் வைத்த தீர்மானத்திற்கு கூட்டத்தில் கலந்துக்கொண்ட ஆளுங்கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்கி ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அங்கு மாநகரசபை ஆளுங்கட்சி கட்சி உறுப்பினர் (ஐ.தே.க)ச சுசந்த பலிஹவடன உரையாற்றுகையில், நுவரெலியாவில் இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்துமே தோல்வியடைந் துள்ளது. உதாரணமாக நுவரெலியா மாநகரசபையால் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா விடுதியை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று தற்பொழுது மூடப்பட்டுள்ளது. அதே போல நுவரெலியாவில் நகர அபிவிருத்தி திட்டங்கள் முற்று பெறாத நிலையில் இருக்கின்றது. தற்பொழுது கிறகரி ஏரியை சுற்றியுள்ள காணியில் நுவரெலியா மாநகரசபை கிறகரி பூங்கா அமைத்து சுற்றுலா பயணிகள் கண்டுகளிப்பதற்கான அபிவிருத்திகள் செய்து பராமரித்து வருகின்றது. இந்த காணியை நகர அபிவிருத்தி சபை பொறுப்பேற்றால் இதனையும் காடாக்கிவிடுவார்கள் எனவே இந்த காணியை வழங்க முடியாதென கூறினார்.

நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரத்ன கருத்து தெரிவிக்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் பெற்றுகொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தை உடனடியாக இரத்து செய்ய கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தேவையான ஆவணங்களை நுவரெலியா மாநகரசபை உடனடியாக தயாரித்து அனுப்புவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி மாநகர சபையின் ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான்னவிற்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.


# பேசாலை பங்கில் மறைபரப்பு விஷேட நிகழ்ச்சி

**( வாஸ் கூஞ்ஞ)**

வருடத்தில் ஒரு முறை திருச்சபையானது மறைபரப்பு ஞாயிறு தினத்தை கொண்டாடி வருகின்றது. இந்த வகையில் அகில இலங்கை திருச்சபையும் இவ் தினத்தை இவ் வருடம் 23.10.2022 அன்று ஞாயிறு பல மறைமாவட்டங்களிலும் நினைவு கூறுகின்றபோதும் மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை பங்கில் எதிர்வரும் 30.10.2022 அன்று செயல்படுத்தி விஷேடமான நிகழ்வுகளை நடாத்துவதற்கு மன்னார் மறைமாவட்டம் தீர்மானித்துள்ளது. இதை முன்னிட்டு பேசாலை பங்கு மக்கள் பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் பரந்தளவிலான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவ் நிகழ்வானது அன்று (30) காலை ஆறு மணிக்கு சிறப்பு திருப்பலியுடன் ஆரம்பமாகி மறைபரப்பை முன்னிட்டு கண்காட்சிகளும் மறைபரப்பு சந்தை ஆகியன ஆலய வளாகத்தில் இடம்பெறுகின்றன. இவ் நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவருடன் இணைந்த பிரதிநிதிகள் மற்றும் மறைபரப்பு தேசிய இயக்குனர் ஆகியோரும் கலந்து கொள்ளுகின்றனர்.

அகில இலங்கை ரீதியாக மறைபரப்பு தினத்தை முன்னிட்டு நிதி சேகரித்து வழங்குவதில் மன்னார் மறைமாவட்டமே நீண்ட காலமாக முதலிடம் பெற்று வருகின்றபோதும் மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை பங்கே இவ் நிதி சேகரித்து வழங்குவதில் முதலிடத்தில் நிற்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இவ் வருடம் பேசாலையில் விஷேட விதமாக மறைபரப்பு நிகழ்வை நடாத்தவும் இவற்றை தேசிய மறைபரப்பு இயக்குனர் மன்னாருக்கு வந்து பாராட்டு தெரிவிப்பதுடன் இவ் நிகழ்வையும் நேரடியாக பார்வையிட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# முறக்கொட்டான்சேனையில் இரு கவிதை நூல்கள் வெளியீடு




**பைஷல் இஸ்மாயில் -**

தமிழ்ச் சங்கம் பாரம்பரிய கிராமிய கலை மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு முறக்கொட்டான்சேனை மண்ணிலிருந்து முறையூர் மங்கேஷ்வரனின் (இந்திரன் மங்கேஷ்) கவிதை நூல்களான "மனதோடு பேசும் மௌனங்கள் ", "மகிழம்பூக்கள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு செங்கலடி வசந்த் என்ஜோய் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

முறக்கொட்டான்சேனை R.K.M வித்தியாலய அதிபர் மயில்வாகனம் தவனேஸ்வரனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன், கௌரவ அதிதியாக கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் ரி.ராஜ்பாபு, கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.ரவி உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகம் சமூகத்தை நோக்கி செல்ல வேண்டும், சமூகம் பல்கலைக்கழகத்தை நோக்கி வரவேண்டும் : தெ.கி. ப. உபவேந்தர்

**நூருல் /ஹுதா உமர்**

மூதூர் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகத்தினர், தங்களது 60 வருடம் பழமையான அரபிக்கல்லூயில் அமைக்கப்பட்டுள்ள புதிய மூன்று மாடி கட்டிடத்தில் நவீன நூலகம் ஒன்றை அமைப்பதுபற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் உபவேந்தர் அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீன், சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம்.அஸ்வர், கலாநிதி எம்.எம் மஷ்ரூபா, ஏ.எம். நஹ்பீஸ், எஸ்.எல்.எம்.சஜீர் ஆகியோரும் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகத்தினரும் கலந்து கொண்டனர். இதன் மூலம் இருதரப்புக் கலந்துரையாடல்களில் இப்பிரதேசத்திலுள்ள அரபிக்கல்லூரி நூலகங்களை மேம்படுத்துவதற்கு வதிவிடபயிற்சி பட்டறையொன்று அவசியம் என பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீன் அவர்களால் முன்வைக்கப்பட்டது.



இதன்போது தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தனது கருத்தை தெரிவிக்கையில் பல்கலைக்கழகம் சமூகத்தை நோக்கி செல்ல வேண்டும் சமூகம் பல்கலைக்கழகத்தை நோக்கி வரவேண்டும் அப்போதுதான் தமது சமூகப் பங்களிப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கு இச்செயற்றிட்டம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் இத்திட்டம் மிகவும் திறம்பட இயங்குவதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பினையும், இடவசதிகளையும் மற்றும் வளவாளர்களையும் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். மேலும் இக் கலந்துரையாடல் முடிவில் குறித்த இப்பயிற்சிக்கான முன்னெடுப்புகளை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கும் இச்செயற்றிட்டத்தை தாங்களே செய்வதற்கும் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். அதேவேளை நூலக மற்றும் பயிற்சி பட்டறையின் குறிக்கோள்கள், எதிர்பாக்கப்படும் அடைவுகள், இலக்குகளையும் நிருவாகக் குழுவினர் மற்றும் குறித்த திட்டத்தின் நிலைபேறான தன்மை போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன.

# ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது



**பாரூக் ஸிஹான்**

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து ஞாயிற்றுக்கிழமை (7) மாலை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை ஆளங்குளம் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் அட்டாளைச்சேனை 5 பகுதியை சேர்ந்த 73 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 9 கிராம் 880 மில்லிகிராம் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட பதில் கட்டளை அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருமான நளீன் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸ ங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443) பொலிஸ் கன்டபிள்களான ராஜபக்ஸ (24812) அபேரட்ன (75812) நிமேஸ்(90699) பியுமக (94143) சாரதி குணபால (19401) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நெருக்கடிக்கு மத்தியிலும் தீபாவளியினை கொண்டாடிய அம்பாறை மக்கள்




**வி.சுகிர்தகுமார்**

உலகவாழ் இந்து மக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இம்முறை இலங்கை வாழ் இந்து மக்களாலும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. இதற்கமைவாக அம்பாரை மாவட்ட மக்களும் தீபாவளியினை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கொண்டாடி வருகின்றனர். அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்திலும், அக்கரைப்பற்று ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

ஆயினும் பக்தர்களின் வருகை குறைவடைந்த நிலையில் குறிப்பிட்ட பக்தர்களின் பிரசன்னத்தோடு வழிபாடுகள் இடம்பெற்றது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ க.தவேந்திரக்குருக்கள் ஆகியோர் பூஜை வழிபாடுகளை நடாத்தி வைத்தனர். இதேநேரம் நரகாசூரன் எனும் மகா கொடிய அரக்கனை மகாலட்சுமி துணையுடன் திருமால் வதம் செய்து அழித்தொழித்த பெருமைக்குரிய இத்திருநாளில் வேற்றுமை அகன்று நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் எனவும் பொருளாதர நெருக்கடியில் இருந்து நாடு மீளவேண்டும் எனவும் அமைதியான முறையில் பிரார்த்தனை வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபட்டனர். பின்னர் பிரதமகுரு உள்ளிட்ட பெரியோர்களிடம் சிறியவர்கள் ஆசீர்வாத்தினை பெற்றுக்கொண்டனர்.

# தீபாவளி திருநாளில் திருகோணமலையில் விசேட பூசை





**(கோகிலாவதனி)**

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலும் ஏனைய ஆலயக்களிலும் தீபாவளி திருநாளை முன்னிட்டு இன்று (24) விசேட கிரியைகள் பூசைநிகழ்வுகள் இடம் பெற்றது. இப் பூசை நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்,

# கல்வியோடு விளையாட்டிலும் சிறக்கின்றது பேசாலை சென் பற்றிமா கல்லூரி



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் பேசாலை மன்.பற்றிமா தேசிய பாடசாலை கல்வியோடு விளையாடடிலும் தற்பொழுது சிறந்து விளங்கி வருகின்றது என்பது நிறுபனமாகி வருகின்றது. அந்தவகையில் இவ் நடப்ப வருடம் 2022 ஆம் ஆண்டில் இவ் கல்லூரியைச் சார்ந்த சுமார் 46 மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் இணைந்து மாகாண மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பல சாதனைகளை படைத்துள்ளனர்.

குறிப்பாக பூ பந்தாட்டம் மேசை பந்தாட்டம் மெய்வல்லுனர் திறனாய்வு ஆகிய போட்டிகளிலேயே சாதனைப் படைத்தவர்களாக காணப்படுகின்றனர். இவ் பாடசாலையானது கடந்த ஐந்து வருடங்களாக பூ பந்தாட்டப் போட்டிகளில் தொடர்ச்சியான சாதனையைப் படைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் சாதனைகள் படைத்துள்ள மாணவர்களையும் இவர்களை பயிற்றுவித்தோரையும் கௌரவிக்கும் முகமாக கடந்த வெள்ளிக்கிழமை (21.10.2022) பேசாலை மன்.பற்றிமா தேசிய பாடசாலை சமூகம் பெருவிழாவை முன்னெடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மற்றும் பேசாலை சென் பற்றிமா தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபராக இருந்து கல்வி ஒழுக்கத்துடன் விளையாட்டிலும் மாணவர்களை சாதனையாளர்களாக ஆக்குவதில் முழுக் கவனம் செலுத்தி வந்த டிலாசால் அருட்சகோதரரும் இவ் பாடசாலைகளின் ஓய்வுநிலை அதிபருமான அருட்சகோதரர் ஸ்ரணி பிரதம அதிதியாகவும் மன்னார் மாவட்டத்தில் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றுபவரும் மன்னார் மாவட்டத்தில் உதைபந் தாட்டத்தை வளர்த்தெடுப்பதில் முக்கிய கவனம் செலுத்துபவருமான வைத்திய கலாநிதி எம்.மதுரநாயகம் பேசாலை உதவி பங்கு தந்தை அருட்பணி டிக்சன் அடிகளார் உட்பட பேசாலை ஓய்வுநிலை விளையாட்டு அதிகாரிகளாக பணியாற்றியவர்களும் இவ் விழாவில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். சாதனைப் படைத்த மாணவர்களுடன் அவர்களின் பெற்றோரும் மேடைக்கு தங்கள் பிள்ளைகளுடன் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதும் ஒரு சிறந்த அம்சமாக காணப்பட்டது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீஸானின் பல்துறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் மாளிகை மரகதங்கள்





**(எம்.என்.எம். அப்ராஸ், ஐ.எல்.எம். நாஸிம்)**

மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழத்திற்கு மாவட்ட அளவில் முதலிடம் பெற்று தெரிவானோர் அடங்களாக பலதுறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் மாளிகை மரகதங்கள் –2022 நிகழ்வு அல்– மீஸ ான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அல்– /ஹசைன் பழைய மாணவர்களின் ஒருங்கமைப்பில் கிழக்கு மாகாண கணனி தொழில்நுட்ப பேரவை பணிப்பாளரும், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். /ஹதா உமரின் தலைமையில் மாளிகைக்காடு அல்– /ஹசைன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் விமர்சையாக இன்று இடம்பெற்றது.

சாதனையாளர்களும், அதிதிகளும் கலாச்சார அம்சங்களுடனான முறையில் வரவேற்கப்பட்டு இடம்பெற்ற இந்நிகழ்வில் மெட்ரோ பொலிட்டன் கல்லூ ரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதான அதிதியாகவும், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம் முன்னிலை அதிதியாகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மேலும் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம். அஸ்மீர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்களான ஜிஹானாஆலிப், நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஞவுனு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டாக்டர் தில்ஷான் நிஸ ாம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கல்முனை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் நிறைவேற்றுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அல்– /ஹசைன் பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மல்யுத்த போட்டியில் வெள்ளி பதக்கத்தை வென்ற மகிழடித்தீவு பாடசாலை மாணவன்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய மாணவன் இ.நிரோஜன் இரண்டாம் இடத்தினைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினைப் பெற்றுள்ளான். அதே பாடசாலையில் கல்வி கற்கும் மற்றுமொரு மாணவனான பு.சபிர்தன் மூன்றாம் இடத்தினைப்பெற்று வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர் மற்றும் ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கிய அதிபர் உள்ளிட்ட அனைவருக்கும் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்திருந்தார்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நாளை கேதாரகௌரி காப்பணியும் பூசை

வரலாற்று சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நாளை(25) செவ்வாய்க்கிழமை காலை 6.30மணி தொடக்கம் கேதாரகௌரி விரத காப்பு அணிதல் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். நாளை சூரிய கிரகணம் தோன்ற உள்ளமையை கருத்தில் கொண்டே காலைவேளையில் காப்பணிதல் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிட்டனர். மேலும் விரதகாரர்கள் நாளை முழுமையான உபவாசம் இருந்து 26.10.2022 பாரணை பூசையுடன் விரதத்தினை முழுமையாக நிறைவுறுத்தமுடியும் எனவும் கூறியுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் கந்த சஸ்டி விரதமானது புதன்கிழமை(26) ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை(30) சூரசம்மதரமும், பிராயசித்த பூசையும், திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்று மறுநாள் காலை விரத பாரணைப்பூசையுடன் இவ்விரதம் நிறைவுபெறவுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# கவிஞர் வடிவேல் அருளின் நாயகன் காவியம் நூல்வெளியீடு





கவிஞர் அருள்நந்நன் எழுதிய நாயகன் காவியம் என்னும் கவிதைநால் வெளியீட்டுவிழா 23.10.22 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இலக்கியவாதி மோகன் பரன் தலைமையில் சுவிஸ்ஸார்லாந்து சூரீச் மாநகரில் இடம்பெற்றது . கவித்துவம் நிறைந்த ஙாலை கவிஞர் வடிவேல் அருள் அவர்கள் யாத்திருந்தார் . நூல் வெளீட்டுவிழா மங்கலவிளக்கேற்றல் , அகவணக்கம் என்பன இடம்பெற்றது .செல்வி ஆரணி வாகீசனின் அவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது . திருமதி கல்யாணி ரஞ்சிதராஜ் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது .

தொடர்ந்து , இந்த நூலுக்குரிய நூல்வெளியீட்டுரையை , மேனாள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய ஆணையர் சுவேந்திராசா அவர்கள் நிகழ்த்தினார் . தொடர்ந்து ஙால் நயவுரையை நாடக கலைஞர் செல்வரந்தினம் தேவசீலன் அவர்கள் நிகழ்த்தினார் . நூலின் சிறப்புப்பிரதிகளை , சுவிஸ் நாட்டின் பிரபல தொழிலதிபர்களான வேலாகிறட் நிறுவனப்பணிப்பாளர் வேலா வரதன் அவர்களும் , இன்போட் தாஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அவர்களும் பெற்றுக்கொண்டனர் . தொடர்ந்து கவிஞர் கிருஸ்னர் இந்திரன் , தாயகவிருட்ச சமூக உதவிநிறுவன பணிப்பாளர் ஜீவா , அட்ஸ்வீல் முருகானந்த தமிழபாடசாலை தலைமையாசிரியர் திருமதி வாகீசன் சிரோன்மணி அவர்களும் வாழ்த்துரை வழங்கினர் . தமிழகத்தில் இருந்து ஓவியர் சக்திதாசன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார் . இறுதியாக நூலாசிரியர் கவிஞர் வடிவேல் அருள் அவர்களின் ஏற்புரை நன்றியுடன் , நூல்வெளியீடு இனிதே மாலை 5 மணியளவில் நிறைவெய்தியது .

# நேர்மையை எண்பித்த பொலிஸ் கான்ஸ்டபில்



**( வாஸ் கூஞ்ஞ)**

பொருளாதார சிக்கல் உள்ளக் காலக்கட்டத்திலும் கைக்கு எட்டிய பணத்தில் மோகம் கொள்ளாது அதை கையாள விரும்பாத பொலிஸ் கான்ஸ்டபில் உரியவரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு தனது நேர்மையை எண்பித்த சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது 2022.10.24 திங்கள் கிழமை அன்று காலை ஆறு மணியளவில் தள்ளாடி வீதியில் பொலிஸ் உத்தியோகத்தர் (இல. பி.எஸ். 57943) சமிந்த திலக்குமார என்பவர் ஒரு பணப்பையினை கண்டெடுத்துள்ளார்.

அவ் பணப்பையினுள் பத்தாயிரம் ரூபாவும் 2 மோட்டர் சைக்கிள் ஆவணங்களும் அடையாள அட்டை ஏரிஎம் காட் பெற்றோல் காட் என்பன காணப்பட்டுள்ளது. இவற்றை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு அவ் பணப்பைக்குள் இருந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டபோது. இவ் பணப்பையை தொலைத்தவர் மன்னாரில் ஒரு பிரபல பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவன் என்றும் இவர் மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த சிவசம்பு வர்மியன் எனவும் இனம்காணப்பட்டுள்ளார். பின் இவர் மன்னார் பொலிஸ் பகுதிக்கு அழைக்கப்பட்டு இவரை பணப்பையை சரிபார்க்கப்பட வைக்கப்பட்டதுடன் மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத்விதானகே மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் மஸ்இம்புள்ள முன்னிலையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் உரியவரிடம் ஒப்டைக்கப்பட்டது. இவ் பொருளை கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தரை அதிகாரிகளும் உரிமையாளரும் பாராட்டியதுடன் நேர்மையுள்ள பொலிசாரும் இருக்கின்றார்கள் என போற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)

அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95